


26.06.2024

தலைப்புச் செய்திகள்

1. மக்களவை தலைவராக மூத்த பி.ஜே.பி. தலைவர் திரு. ஓம்பிர்லா 2-வது முறையாக பதவியேற்றுள்ளார்.

2. மக்களவை அடுத்த 5 ஆண்டுகள் சுமூகமாக நடைபெற மக்களவை தலைவரின் அனுபவம் உறுதுணையாக இருக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்

3. எதிர்கட்சியினரின் அமளி காரணமாக மக்களவை இன்று நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

4. தமிழக சட்டப்பேரவையில் சாதிவாரியான கணக்கெடுப்பை உடனடியாக நடத்தவேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தும் அரசின் தனித்தீர்மானம் இன்று ஒருமனதாக நிறைவேறியது.

5. ரு.ளு. ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் இரண்டாவது சுற்றுக்கு கிருஷ்ணபிரசாத், சாய்பிரதீக் இணை முன்னேறியுள்ளது

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□

மக்களவை

18-வது மக்களவையின் தலைவராக மூத்த பி.ஜே.பி. தலைவர் திரு. ஓம்பிர்லா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மக்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற திரு. ஓம்பிர்லாவை, பிரதமர் திரு. நரேந்திரமோடியும், எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு ஆகியோர் அழைத்து சென்று மக்களவை தலைவர் இருக்கையில் அமர வைத்தனர்.

முன்னதாக திரு. ஓம்பிர்லாவை மக்களவை தலைவராக தேர்ந்தெடுப்பதற்கான தீர்மானத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி மற்றும் 12 தேசிய ஜனநாயக கூட்டணி தலைவர்கள் முன்மொழிந்தனர்.

எதிர்கட்சிகளின் தரப்பில் காங்கிரஸ் உறுப்பினர் திரு. கே. சுரேஷுக்கு ஆதரவாக 3 பேர் தீர்மானங்களை கொண்டுவந்தனர்.

வாக்கெடுப்பிற்கு எதிர்கட்சிகள் வலியுறுத்தாதை அடுத்து குரல் வாக்கெடுப்பு மூலம் திரு. ஓம்பிர்லா வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

மக்களவை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. ஓம்பிர்லாவுக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர் திரு. நரேந்திரமோடி, தொடர்ந்து இரண்டாவது முறையாக மக்களவை தலைவராக தேர்வாகி அவர் சாதனை படைத்துள்ளதாக பாராட்டினார்

அடுத்த 5 ஆண்டுகள் மக்களவையில் அவருடைய வழிகாட்டுதலை எதிர்நோக்கி இருப்பதாக கூறினார்.

17-வது மக்களவையில் பல்வேறு சிறப்புமிகு சட்டங்கள் திரு. ஓம்பிர்லா தலைமையில் நிறைவேற்றப் பட்டதாக பிரதமர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் நடத்தையும், பொறுப்புத் தன்மையுமே, பாராளுமன்ற ஜனநாயகத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

திரு. ஓம்பிர்லாவின் தலைமையில் கடந்த மக்களவை 97 சதவிகித பணிகளை ஆக்கப்பூர்வமாக செயல்படுத்தியதாக பிரதமர் குறிப்பிட்டார்.

திரு. ஓம்பிர்லாவுக்கு வாழ்த்து தெரிவித்த மக்களவை எதிர்கட்சித்தலைவர் திரு. ராகுல்காந்தி, மக்களின் குரலை மக்களவை பிரதிபலிப்பதாக குறிப்பிட்டார்.

மக்களவை சுமூகமாக நடைபெற திரு. ஓம்பிர்லாவிற்கு ஆதரவு அளிக்கப்படும் என்று உறுதியளித்த அவர், ஒத்துழைப்பு என்பது நம்பிக்கையின் அடிப்படையிலானது என்றும், எதிர்கட்சிகளின் குரல் ஒலிக்க அனுமதி வழங்கப்படுவது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

சமாஜ்வாடி கட்சித்தலைவர் திரு. அகிலேஷ் யாதவ்

திரிணமுல் காங்கிரஸ் உறுப்பினர் திரு. சுதிப் பந்தோ பாத்யாயா ஆகியோரும் அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

□□□□□□□

ஓம் பிர்லா நன்றி

மக்களவை தலைவராக பணியாற்ற மீண்டும் வாய்ப்பளித்தமைக்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், அமைச்சர் திரு கிரண் ரிஜுஜுவிற்கும், ஏனைய உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாக திரு. ஓம்பிர்லா தெரிவித்தார்.

இந்நிலையில் 1975-ம் ஆண்டு அவசர நிலை பிரகடனம் குறித்து மக்களவை தலைவர் திரு. ஓம்பிர்லா அவையில் கருத்து வெளியிட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, எதிர்கட்சியினர் அவையில் கடும் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை நாளைவரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

□□□□□□□

நடாளுமன்றம் பிரல்ஹாத்

முன்னதாக நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி, மக்களவைத் தலைவர் பதவிக்கு காங்கிரஸ் சார்பில் வேட்பாளர் நிறுத்தப்பட்டது குறித்து கண்டனம் தெரிவித்தார்.

துணைத்தலைவர் பதவி குறித்து பேச்சுவார்த்தை நடத்த அரசு தயாராக இருந்ததாகவும், எதிர்கட்சிகள் நிபந்தனைகள் விதித்தது சரியல்ல என்றும் குறிப்பிட்டார்.

இதனிடையே செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சி தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை தலைவர் பதவி குறித்து அரசுக்கும் எதிர்கட்சிகளுக்கும் இடையே எந்தவித பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை என்றும், எனவேதான் எதிர்கட்சிகள் தரப்பில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. கவுரவ் கோகோய் பேசுகையில் ஆளுங்கட்சி தனது மனப்பாங்கை மாற்றிக்கொள்ள வேண்டியது அவசியம் என்றும், 2024-ம் ஆண்டு மக்களவை தேர்தலுக்கு பின்னரான சூழல்களில் மாற்றங்கள் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

□□□□□□□

நீட்

நீட் தேர்வு முறைகேடுகள் குறித்த விசாரணைகளை மத்திய புலனாய்வு குழுவினர் மஹாராஷ்டிர மாநிலத்தின் பீட் நகரில் இன்று தொடங்கி உள்ளனர்.

முதற்கட்டமாக மஜல்கான் தாலுக்காவை சேர்ந்த ஆசிரியர்களிடம் விசாரணை நடைபெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக முறைகேடுகள் தொடர்பாக நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டு வரும் 2-ம் தேதிவரை நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதுவரை குற்றம் சாட்டப்பட்ட 4 பேரில், 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீட் தேர்வில் பங்கேற்ற 12 மாணவர்களின் அனுமதி அட்டைகள் கைது செய்யப்பட்ட இருவரின் கைபேசியில் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது

இதனிடையே குஜராத் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் நீரஜ் குப்தா பேசுகையில் நீட் இளநிலை மருத்துவர் தேர்வு தொடர்பாக அண்மையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் எதிர்காலங்களில் தேர்வின் தரம் மேம்படுத்தப்படும் என்றார்.

மாணவர்கள் அமைதி காக்க வேண்டுமென்றும், மாணாக்கரின் நலனுக்காக உரிய நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்வதாகவும் பரேலி சர்வதேச பல்கலைகழக வேந்தர் திரு. கேசவ்குமார் அகர்வால் கூறியுள்ளார்.

□□□□□□□

தமிழக சட்டப்பேரவை

தமிழக சட்டப்பேரவையில் சாதிவாரியான கணக்கெடுப்பை மக்கள் தொகை கணக்கெடுப்புடன் இணைந்து நடத்தவேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தும் அரசின் தனித்தீர்மானம் இன்று ஒருமனதாக நிறைவேறியது.

முன்னதாக இந்த தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், 2021-ம் ஆண்டு மேற்கொள்ள வேண்டிய மக்கள் தொகை கணக்கெடுப்பை மத்திய அரசு உடனடியாக நடத்த வேண்டும் என்று கோரினார்.

மக்கள் அனைவருக்கும் கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு ஆகிய அனைத்திலும் சம உரிமையும், சம வாய்ப்பும் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் இந்த கணக்கெடுப்பு நடத்துவது அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்

இந்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்

□□□□□□□

தங்கம் தென்னரசு

தமிழ்நாட்டில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டும் பணிகள் துரிதப்படுத்தும் என்று திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்

சட்டப்பேரவையில் இன்று தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசியஅவர், இந்த இலக்கை இன்னும் 6 ஆண்டுகளில் எட்ட அரசு உறுதியாக உள்ளது என்றார்.

மாநிலத்தில் முதியோர்கள் எதிர்கொள்ளும் சவால்களை களைவதற்கான கணக்கெடுப்பின் இரண்டாவது அலை வரும் ஆண்டில் தொடங்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

அரசு பள்ளி மாணாக்கரின் கணித திறமைகளை கண்டறிந்து மேம்படுத்தி உயர்நிலை பள்ளி மாணவர்களை தக்கவைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

□□□□□□□

கே.என்.நேரு

திருச்சி மாவட்டம் மணப்பாறை மற்றும் குளித்தலை பகுதிகளில் 800 கோடி ரூபாய் மதிப்பிலான கூட்டுகுடிநீர் திட்டப்பணிகள் விரைவில் தொடங்கும் என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு இன்று சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது தெரிவித்தார்

.. வாய்ஸ் ..

கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய் பட்டினம் முதல் மண்டைக்காடு வரை 17 கிலோ மீட்டர் தொலைவு கால்வாய் தூர்வாரப்படும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார்.

திருச்சி கல்லுக்குழியில் 464 புதிய வீடுகள் கட்டப்பட்டு வருவதாக மாநில வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு. முத்துசாமி தெரிவித்துள்ளார்.

பேரவையில் இதனைத் தெரிவித்த அவர், செங்குளம் காலனி பகுதியில் பழுதடைந்த 108 வீடுகளை இடித்து புதிய வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்

கொடைக்கானல் - பேத்துப்பாறை வரை சிறிய பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் கூறியிருக்கிறார்

□□□□□□□

தமிழக சட்டப்பேரவையில் அஇஅதிமுக உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் அமளியில் ஈடுபட்டதாக கூறி ஒட்டுமொத்தமாக அனைவரையும் பேரவையிலிருந்து வெளியேற்ற அவைத்தலைவர் உத்தரவு பிறப்பித்தார்.

பேரவை தலைவர் பலமுறை எச்சரித்தும் அஇஅதிமுக உறுப்பினர்கள் அனைவரும் நின்றுகொண்டு கோஷங்களை எழுப்பியதால் அவை காவலர்கள் அவர்களை அவையிலிருந்து வெளியேற்றினர்.

முன்னதாக இன்றுகாலை பேரவை கூடியதும் கேள்வி நேரம் தொடங்கும் முன்னரே அஇஅதிமுக உறுப்பினர்கள் தாங்கள் அளித்திருந்த ஒத்திவைப்பு தீர்மானம் குறித்து கேள்வி எழுப்பினர்.

கேள்வி நேரத்தில் வேறு பிரச்சனைகளை எழுப்ப விதிகள் இடமளிக்கவில்லை என்றும், கேள்வி நேரம் முடிவடைந்த பின்னர் பேச அனுமதி வழங்கப்படும் என்று அவைத்தலைவர் குறிப்பிட்டார்.

ஆனால் இதற்கு செவி மடுக்காமல் அஇஅதிமுக உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபடவே அனைவரையும் வெளியேற்ற பேரவைத்தலைவர் உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து பேசிய முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின், மக்கள் பிரச்சனைகள் குறித்து பேச எதிர்கட்சிகளுக்கு விருப்பமில்லை என்றும், அஇஅதிமுகவினர் நாள்தோறும் அமளியில் ஈடுபட்டு வெளியேற்றப்படுவதாகவும் கூறினார்.

இதனிடையே இந்த கூட்டத்தொடர் முழுவதும் அஇஅதிமுக உறுப்பினர்கள் அவையிலிருந்து நீக்கம் செய்யப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை அமைச்சர் திரு. துரைமுருகன் கொண்டுவந்தார்.

குரல் வாக்கெடுப்பு மூலம் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

□□□□□□□

சர்வதேச போதைப் பொருள் விழிப்புணர்வு தினம்

சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினம் இன்று கடைபிடிக்கப் படுகிறது.

போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிராக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் நடைபெறுகின்றன

□□□□□□□

வானிலை

மேற்கு திசைக்காற்றின் வேக மாறுபாடு காரணமாக நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் இன்று கன மிக கனமழையும்

திருப்பூர், தேனி, தென்காசி, திண்டுக்கல், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

மன்னார் வளைகுடா, தென் தமிழகம், வங்கக்கடல், அரபிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் வரும் 30-ம் தேதிவரை கடலுக்குள் செல்லவேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

□□□□□□□

**பேட்மிண்டன்**

டெக்சாஸில் நடைபெறும் ரு.ளு. ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் கிருஷ்ணபிரசாத், சாய்பிரதீக் இணை 2-வது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ட்ரீசாஜாலி, காயத்ரி கோபிசந்த் இணை - சீன தைபே இணையை நாளை எதிர்கொள்கிறது.

□□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.